பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 551331 ★ நிறுவியது: 1958 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: கார்த்திகை 8 (23—11—72) வியாழன் வெளியூர்: கார்த்திகை 9 (24—11—72) வெள்ளி [இதழ்: 133

உயர் நீதிமன்றங்களில் 4 இலட்சம் வழக்குகள் மீது தீர்வு காணப்படவில்லையாம்

புதுடில்லி, நவ. 23—

இந்தியா முழுவதிலும் உயர் நீதி மன்றங்களில் 4,09,089 வழக்குகள் தீர்வு காணப்படாமல் கிடக்கின்றனவாம்.

டெல்லியிலுள்ள தலைமை நீதி மன்றத்தில் 9,913 வழக்குகள் தீர்வு காணப்படாமல் இருக்கின்றனவாம்.

இந்தத் தகவலை நாடாளுமன்றத்தில் சட்ட அமைச்சர் கோகலே தெரிவித்தார்.

காற்றில் வந்த செய்தி:

'புரட்சித் தலைவ'ரை 'அனாதை'யாக்கிவிட்ட ஏடுகள்

பழுத்த மரத்தை வட்டமிட்ட வௌவால்கள் பழத்தைத் தின்றுவிட்டுப் பறந்துவிட்டன

வேதனைப்படுகிறார் 'வெற்றுவேட்டு' வீரர் — ஆறுதல் கூறுகிறார் 'அண்டர்கிரவுண்'டார்

குறை மாத பிரசவத்தில் செத்தும் பிறந்த குழந்தையைக் குழியில் வைப்பதற்கும் மதில் தூக்கி மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருக்கும் தாயைப்போல இன்று காட்சியளிக்கிறார் ஒட்டுக் காங்கிரசுத் தலைவர்!

அந்தக் குழந்தையைப் பிழைக்க வைக்க முடியுமா என்று இந்திரா கட்சியைச் சேர்ந்த சில 'பிரகஸ்பதி'கள் முயற்சி செய்து பார்த்தார்கள்!

'பார்த்தீர்களா — இந்தக் குழந்தையின் அழகை; குழந்தை என்றாலும் இதுவல்லவா குழந்தை' மூக்கும் முழியுமாகப் பிறந்துள்ள இந்தக் குழந்தைக்கு உயிர்தான் இல்லை; இல்லாவிட்டாலும் பரவாயில்லை; இதை வைத்துக்கொண்டே நான் காட்டப்போகிறேன் பாருங்கள் வித்தை' என்றார் அண்டர் கிரவுண்டு கல்யாணசுந்தரம்!

இந்த 'அற்பாயுள்' குழந்தைக்கு 'பிரமாதமான எதிர்காலம் இருப்பதாக 'ஜாதகம்' கணித்துச் சொல்லிக்கொண்டிருந்த ஏடுகளெல்லாம், இப்போது ஒவ்வொன்றாக 'வாபஸ்' ஆகிக்கொண்டிருக்கின்றன.

"இனி தி. மு. க. ஏடுகளை நம்பாதீர்கள்; 'நவசக்தி' — 'நாத்திகம்' — 'அலை ஓசை' — 'தென்னகம்' ஆகிய இந்தப் பத்திரிகைகளை மட்டுமே படியுங்கள்" என்று நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொன்னார் ஒட்டுக் காங்கிரசுத் தலைவர்!

என்ன இருந்தாலும், நன்றி கெட்டதனமாக அந்தப் பத்திரிகைகள் இவ்வளவு சீக்கிரம் அவரைக் காலைவாரிவிட்டிருக்கக் கூடாது!

மேயர் தேர்தல் வந்தாலும் வந்தது — ஒட்டுக் காங்கிரசின் உண்மை அப்பட்டமாகத் தெரிந்துவிட்டது! அதை நம்பிப் பிழைப்பு நடத்தலாம் என்று இருந்த ஏடுகளெல்லாம் 'அம்பேல்' விட ஆரம்பித்து விட்டன!

செத்த குழந்தையை எத்தனை நாளைக்குத்தான் காட்சிப் பொருளாக வைத்திருக்க முடியும்? புனுகு ஜவ்வாதெல்லாம் போட்டு வைத்திருந்தார்கள் — அதுவும், மேயர் தேர்தல் வரையில்தான் தாக்குப் பிடித்தது; அழுகி நாற்றமெடுக்குமுன்பே அதைப் புதைத்துவிட்டிருக்க வேண்டாமா?

குழந்தையை 'அசகாய சூரன்' என்று வர்ணித்தவர்களெல்லாம், திடீரென்று குழியில் தள்ளிவிடப் பார்க்கிறார்கள்; குழந்தையைப் பெற்ற தாயும் — அண்டர் கிரவுண்டு 'தாதி'யும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்!

மேயர் தேர்தலில் பெரும் புரட்சி ஏற்படப் போகிறது என்று எதிர்பார்த்தார்கள் — ஏமாந்தார்கள்!

மேயர் தேர்தல் முடிந்ததும் முடியாததுமாகப் புரட்சித் தலைவரை, 'நாத்திக'மும், 'நவசக்தி'யும் சாட ஆரம்பித்துவிட்டன! 'நடுநிலை' ஏடு, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் விழிக்கிறது! செத்துப் பிழைத்த ஒரு ஏடு, 'நான் புரட்சித் தலைவருக்கு இன்னும் 'மித்திரன்'தான் என்று காட்டிக்கொண்டிருக்கிறது!

பேசத் தெரியாமல் பேசிப் 'பெருந் தலைவரைத் தாக்கிவிட்டு, 'ஆழந்தெரியாமல் காலைவிட்டு விட்டோமே' என்று இப்போது வேதனைப்படுகிறாராம் புரட்சித் தலைவர்!

என்றாலும், 'ஆச்சாரியார் 'ஆசி' இருக்கும் வரையில், நமக்கு என்ன குறை' என்று தனக்குத்தானே ஆறுதல் தேடிக்கொண்டிருக்கிறாராம்!

பெருந் தலைவரைத் தாக்கப்போய், 'நாத்திக'மும் — 'நவ சக்தி'யும் திருப்பித் தாக்க ஆரம்பித்துவிட்டன! 'ஆதாயம்' இருக்கும் வரைதான் 'அலை' — ஓசையெழுப்பும் — அப்புறம்?

"இந்தப் பத்திரிகைகள் போனால் போகட்டும் — கவலைப்படாதீர்கள்; இருக்கவே இருக்கிறது — உங்கள் 'தென்னகம்' — எங்கள் ஜனசக்தி' என்று அண்டர் கிரவுண்டார் ஆறுதல் கூறுகிறாராம்!

'உன்னாலே நான் கெட்டேன் — என்னாலே நீ கெட்டாய்' என்று ஒருவர் காதை ஒருவர் பிடித்துக்கொண்டு தோப்புக் கரணம் போடாதது ஒன்றுதான் குறை!

இப்போதெல்லாம் லாயிட்ஸ் ரோடு பக்கம் நிருபர்கள் வருவதும் குறைந்துவிட்டதாம்! நான் தவறாமல் 'அட்டண்டென்ஸ்' கொடுத்து வந்த நிருபர்களெல்லாம் 'ஆப்சண்டு' ஆகி வருகிறார்களாம்!

'ஓகோ'வென்று விளம்பரம் கொடுத்துவந்த வடநாட்டு ஆங்கில ஏடுகள்கூட, 'மதியழகன்' விவகாரத்தை வைத்துக் கொண்டு ஒதுங்கிப் பிடித்துவிட்டன!

பத்திரிகைகளை நம்பி இனிப் பயனில்லை' என்ற முடிவுக்கு ஒட்டுக் காங்கிரசுத் தலைவர் வந்துவிட்டாராம்!

பழுத்த மரத்தை வட்டமிட்டுக் கொண்டிருந்த 'வௌவால்கள்' எல்லாம் அகப்பட்டதைத் தின்றுவிட்டுப் பறந்து விட்டனவாம்!

இப்படிப் பல 'சுவையான' செய்திகள் காதில் விழுந்து கொண்டிருக்கின்றன! இன்னும் நிறைய இருக்கின்றன! அவ்வப்போது நீங்களும் படித்துச் சுவைக்கலாம் — ஆவலுடன் எதிர்பாருங்கள்!

—'சேனா'

கழகத்துக்கு எதிராக அகில இந்திய வானொலி

பேராசிரியர் அன்பழகன் குற்றச்சாட்டு

மத்திய அமைச்சரிடம் இரா. செழியன் புகார்

புதுடில்லி நவ 22—

அகில இந்திய வானொலி நிலையம் தி. மு. க. அரசுக்கு எதிராகவும் — எம். ஜி. இராமச்சந்திரனுக்கு ஆதரவாகவும் பிரச்சாரம் செய்யும் வேலையில் ஈடுபட்டிருப்பது குறித்துத் தமிழக நல்வாழ்வுத்துறை அமைச்சர் புதுடில்லிச் செய்தியாளர்களிடம் பேசுகையில் கண்டனம் தெரிவித்தார்.

செய்தியாளர்களுக்குப் பேராசிரியர் அன்பழகன் அளித்த பேட்டியில் கூறியதாவது:—

"வானொலியில் முப்பது முப்பத்தைந்து சதவிகித நேரம் அகில இந்தியச் செய்தியிலும் — மாநிலச் செய்தியிலும் எம். ஜி. இராமச்சந்திரனுக்கு இடம்தரப்படுகிறது.

இராமச்சந்திரனின் இயக்கம் வலிவிழந்து வருகிறது; ஊழல் குற்றச்சாட்டுகள் தனிப்பட்ட உள்நோக்கத்தின் பேரில் தரப்படுகிறது என்று மக்கள் உணர்ந்து வருகின்றனர்.

கம்யூனிஸ்டுகள் இராமச்சந்திரனுக்கு ஆதரவு தருவதால், சில குறிப்பிட்ட பகுதிகளில் ஆதரவு அவருக்கு இருக்கலாம்.

இதுவரை தி. மு. கழகத்தைப் பொதுவாக எதிர்த்து வந்த கட்சிகள்கூட இப்பொழுது இராமச்சந்திரன் பக்கம் இல்லை!

வானொலியின் குறும்பு

நவம்பர் 14-ந் தேதி வானொலிச் செய்தியார் கூறிய விமர்சனத்தில், 'சபாநாயகரின் நடவடிக்கையால் கவர்னர், சட்டமன்றத்தைக்கலைக்க பரிந்துரை செய்யலாம்' என்றும், 'தலைமையில் ஏதோ தவறு இருப்பதால் தி. மு. கழகம் பதவியிலிருந்து இறங்கவேண்டும்' என்றும் குறிப்புக் காட்டப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரச்சினை பற்றி மத்திய செய்தி—தகவல் துறை அமைச்சர் ஐ. கே. குஜ்ராலிடம் புகார் கூறியிருப்பதாக நாடாளுமன்ற இரு அவைகளின் தி. மு. க. குழுத் தலைவர் இரா. செழியன் செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார்.

மாநில அரசின் நிலைத் தன்மையைக் குறைவுபடுத்தும் மத்திய அமைச்சர்கள் சிலர்போக்கையும் நான் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

தலைமை அமைச்சரைப் பற்றியோ — மத்திய அரசாங்கத்தைப் பற்றியோ இந்தப் பிரச்சினையில் குறைகூறவில்லை; பொறுப்பான ஒத்துழைப்பும் — நியாயமான [illegible]திர்ப்பும் காட்டும் இயக்கமாக தி. மு. கழகம் மத்திய அ[illegible]சப் பொறுத்த வரையில் இ[illegible]க்கும்; நாட்டின் வேறு மாநிலங்களைப் போலவே தமிழகத்தையும் மத்திய அரசு நடத்தும் என்று நம்புகிறேன்.

மத்திய அரசின் தலையீடு என்ற பிரச்சினைக்கே இடமில்லை; எங்கள் கட்சி உறுதியாக இருக்கிறது; சட்டமன்றத்தில் பெரும்பான்மை கொண்ட — நிலையான அரசாக இருக்கிறது; இந்த இராமச்சந்திரன் தான், 'மத்திய அரசின் தலையீடு வரவேண்டும்' என்பதற்காக சட்டம் — ஒழுங்குப் பிரச்சினையை உருவாக்க நினைக்கிறார்!

மதியழகனின் கருத்தை மத்திய அமைச்சர் சுப்பிரமணியம் ஆதரித்திருக்கிறார்; கழகம் பெரும்பான்மை பலத்துடன் இருக்கும்போது, இப்படி இவர் கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது?"

எம். ஜி. இராமச்சந்திரனும் — கல்யாணசுந்தரமும் தந்த மனு பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கையில், 'இரண்டுநாட்களுக்கு முன் வந்துசேர்ந்தது; பதில் விரைவில் அனுப்பப்படும்' என்றார்.

"பிறரைக் கணக்குக்கேட்கின்ற எம். ஜி. இராமச்சந்திரன், தனது கணக்குகளை 1969-ம் ஆண்டிற்குப் பிறகு தராதவர்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ரூ.55 கோடிக்கு மானியக் கோரிக்கை

மக்களவையில் தாக்கல்

புதுடில்லி, நவ. 23—

1970—71-ம் ஆண்டுக்கான வரவு — செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட செலவுகளுக்குக் கூடுதலாக ரூ. 55.54 கோடிக்கான மானியக் கோரிக்கை மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

இராணுவத்துக்குக் கூடுதலாக ரூ 38.01 கோடி செலவிடப்பட்டது; பொதுப்பணித் துறைக்கு ரூ. 4.93 கோடியும், உணவுத் தானிய உரம் வாங்கியதற்கு ரூ. 11.70 கோடியும் கூடுதலாகச் செலவிடப்பட்டது.

உரிய நேரம் வரவில்லையாம்

புதுடில்லி, நவ. 23—

"அவசர நிலைமையை ரத்துசெய்ய வேண்டிய நேரம் வரவில்லை; நிலைமையை முழுமையாக மதிப்பிட்டு அரசு இவ்வாறு முடிவு செய்திருக்கிறது"

என்று மக்களவையில், உள்துறை துணையமைச்சர் மோசின் தெரிவித்தார்.

மர்மப் பெட்டியின் 'மர்மம்' என்ன?

துரோகிகளின் வேடம் நாளுக்குநாள் கலைந்து வருகிறது

கழகம் ஓர் ஆலமரம்-- அதனுடன் மோதினால் வண்டிதான் உடையும்

திருச்சிப் பொதுக்கூட்டத்தில் நாவலர் முழக்கம்

திருச்சி, நவ. 23—

"கழகத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற சோதனைக் கட்டத்திலிருந்து மீளு[illegible]ம் கவனத்தைச் செலுத்த வேண்டும்; காங்கிரசுக்காரர்கள் நம்மை எவ்வளவோ திட்டினார்கள் -- நாம் என்ன குறைந்தா போய்விட்டோம்? எதிரிகள் கூறும் குற்றச்சாட்டுகளுக்கு மட்டும் பதில் அளித்தால் போதும்! தனிப்பட்ட முறையில் யாரையும் தாக்கக்கூடாது!

"இந்திரா காங்கிரசு என்ற வண்டி, ஆலமரம் போன்று இருக்கின்ற முன்னேற்றக் கழகம் என்ற மரத்தின்மீது மோதியதன் காரணமாக இரண்டு கிளைகள் போயிற்றே தவிர, கழகம்' என்ற ஆலமரம் வீழ்ந்துவிடவில்லை! சலசலப்புகளுக்கெல்லாம் கழகம் அழிந்துவிடாது!"

என்று, கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திருச்சியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

18-11-72 அன்று திருச்சியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஏறக்குறைய 10,000-க்கு மேற்பட்ட மக்கள் திரண்டிருந்து நாவலர் அவர்களின் கருத்து விளக்கங்களைக் கேட்டனர்.

கூட்டத்திற்கு எஸ். ஏ. ஜி. ராபி தலைமை வகித்தார்; சட்டமன்ற உறுப்பினர்களும்--மேலவை உறுப்பினர்களும், வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், எம். எஸ். மணி, திருச்சி மாவட்டச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஏற்பட்ட சோதனைகளை எண்ணிட இயலா!

நாவலர் பேசுகையில் மேலும் கூறியதாவது :—

"பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவினையும் -- ஆற்றலையும் -- துணையாகக் கொண்டு -- பண்பாட்டையும் துணையாகக் கொண்டு 1948ல் துவக்கிய இந்தக் கழகத்தை, கட்டிக்காத்து வளர்த்து வருகிறோம்; கழகம் மெல்ல மெல்ல -- ஆனால் உறுதியாக வளர்ந்து நிலைத்துள்ளது.

இந்தக் கழகத்திற்குப் பல சோதனைக் கட்டங்கள் வந்துள்ளன; அந்தச் சோதனைகளையெல்லாம் நாம் பல வகையிலும் சமாளித்திருக்கிறோம்.

1944-ல் திராவிடர் இயக்கத்துக்கு ஒரு சோதனைக் கட்டம் ஏற்பட்டது; பிறகு 1949ல் பெரியாருக்கும் -- நமக்கும் ஏற்பட்ட தகராறில் ஒரு சோதனைக் கட்டம் ஏற்பட்டது; என்றாலும் நாங்கள் பெரியாரைத் தாக்கிப் பேசவில்லை.

திராவிடர் கழகம் -- திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரண்டையும் அண்ணா அவர்கள், 'இரட்டைக் குழல் துப்பாக்கி' என்றுதான் அழைத்து வந்தார்!

பிறகு ஈ. வெ. கி. சம்பத் விலகியபோது ஒரு சோதனைக் கட்டம் கழகத்திற்கு ஏற்பட்டது; அதிலிருந்து மீண்டு வந்தோம்!

கடைசியாக, உயிருக்கு உயிராக நாம் பேசிவந்த 'திராவிட நாடு' கொள்கையைக் கைவிட்ட நேரத்தில் மதிப்பிற்குரிய காமராசர், 'தி. மு. க.-வினர் கொள்கையை விட்டுவிட்டனர்; இனிமேல் இவர்களை யாரும் ஆதரிக்கமாட்டார்கள்' என்று சொன்னார்.

அதுமட்டுமல்லாமல், தேர்தலில் நாம் போட்டியிட்ட நேரத்தில் 'மூஞ்சியைப் பார் மூஞ்சியை; இந்த மூஞ்சியா தேர்தலில் ஜெயிக்கப் போகிறது' என்றும் காமராசர் கேட்டார்!

பிறகு அண்ணா அவர்கள் திடீரென்று நம்மை விட்டு மறைந்தார்; அப்பொழுது மாற்றார்கள், நாம் அழிந்து விடுவோம் என்கின்ற தப்புக் கணக்கைப் போட்டார்கள்; ஆனால் அதற்குப் பிறகும் தி. மு. கழகம் வளர்ந்தது!

அகில இந்தியப் புகழ்பெற்ற-- ஆனைப்பட்ட [illegible] கழகத்தை அழித்தொழிக்க எவ்வளவோ முயன்று பார்த்தும் முடியாததை, இன்று நம்மை விட்டு பிரிந்து சென்ற மதிப்பிற்குரிய எம். ஜி. ஆரா இந்தக் கழகத்தை அழித்துவிடப் போகிறார்?

தொண்டர்கள் உழைப்பால் உருவானதாயிற்றே!

1949-ல் ஒரு சில நூறு பேரை மட்டுமே வைத்து ஆரம்பித்த இந்தக் கழகம், இன்று 15 இலட்சம் உறுப்பினர்களையும், 18,000 கிளைக் கழகங்களையும் கொண்டிருக்கிறது; உண்மைத் தொண்டர்களின் உழைப்பு இல்லாமல் இந்தக் கழகம் இப்படி வளர்ந்துவிடவில்லை!

தகராறு-- யாருக்கு யாரோ?

இப்பொழுது நமக்கு ஏற்பட்டிருக்கின்ற தகராறு, நடிகர் எம். ஜி. ஆருக்கும் -- கழகத்திற்கும் அல்ல; பொருளாளர் எம். ஜி. ஆருக்கும் — சட்டசபையில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கின்ற எம். ஜி. ஆருக்கும், போராட்டத்திற்குத் தலைமை தாங்குகின்ற எம். ஜி. ஆருக்கும் — எதிரிகளின் கையில் சிக்கிக்கொண்டிருக்கிற எம். ஜி. ஆருக்கும்— கழகத்திற்கும்தானே தவிர, வேறல்ல!

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். நடிப்பை நாங்கள் ரசிக்கிறோம் -- இன்றைக்கும் ரசிக்கிறோம்-- நாளைக்கும் ரசிப்போம்.

ஜெமினி கணேசனுக்கும் -- நமக்கும் என்ன சம்பந்தம்? அவர் நடிப்பை நாம் ரசிக்கவில்லையா?

டி. ஆர். இராசகுமாரிக்கும்-- நமக்கும் என்ன சம்பந்தம்? அவரது நடிப்பை நாம் ரசிக்கவில்லையா?

நகைச்சுவை நடிகர் நாகேசுவுக்கும் -- நமக்கும் என்ன சம்பந்தம்? அவரது நகைச்சுவை நடிப்பை நாம் ரசிக்கவில்லையா?

ஆகவே, நடிப்பைப் பொறுத்த மட்டில் நமக்கும் -- அவருக்கும் தகராறு கிடையாது!

தொல்லைகள் ஏற்பட்டதால் துவண்டுவிட்டார்

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அந்நியச் செலாவணிப் பிரச்சினையிலும், வருமான வரித் தொல்லையிலும் சிக்கித் தவித்தார்; 'மொத்தம் ரூ. 29 இலட்சம் வருமான வரி கட்டவில்லை' என்று வருமான வரித் துறையினர் இவரது வீட்டையும், தோட்டத்தையும் ஜப்தி செய்ய முனைந்தனர்; உடனே எம். ஜி. ஆர்., 'ஜப்தி செய்யக்கூடாது' என்று உயர் நீதிமன்றத்தில் 'ரிட்' போட்டு, 'ஸ்டே-ஆர்டர்' வாங்கினார்; பிறகு அவரே அந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். இடையில் என்ன நடந்ததோ--ஏது நடந்ததோ--தெரியவில்லை!

"தி. மு. கழகத்தில் இருப்பதால்தான் நாம் இத்தகைய வரித் தொல்லைகளுக்கு ஆளாக நேரிடுகிறது; எனவே அதிலிருந்து விலகி இந்திரா காங்கிரசுக்கு அனுசரணையாக நடந்து கொண்டால் நமக்கு இத்தகைய தொல்லைகள் நேரிடாது" என்று அறிந்த பிறகுதான், கழகத்தில் பேசவேண்டிய பேச்சைப் பொதுக்கூட்டத்தில் திடீரென்று பேசிவந்திருக்கிறார்!

மணியோசை கேட்ட மர்மம்?

இன்னொன்றையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்; கடந்த 8-ந் தேதியன்று கே. ஏ. மதியழகன், லாயிட்ஸ் ரோடில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், எம்.ஜி.ஆர். பேசுவதற்கு முன்பு பேசியிருக்கிறார்; அவர் பேசிய பேச்சு 'நவசக்தி' பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது; அப்பேச்சில், 'எம்.ஜி.ஆர். கழகத்தை விட்டுச் சென்றுவிட்டால், கழகம் அழிந்துவிடும் -- கழகம் சாக்காடாகிவிடும்' என்று கூறப்பட்டிருக்கிறது.

'எம்.ஜி.ஆர். கழகத்தைவிட்டு வெளியே சென்றுவிட்டால்...' என்ற அந்த எண்ணம் ஏன் அவருக்கு ஏற்பட்டது? இது அவருக்கு ஏற்படக் காரணம் என்ன?

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், ஏற்கனவே அவர்கள் இத்தகைய நிலையைக் கழகத்தில் உருவாக்கத் தீர்மானித்து விட்டார்கள் என்பதுதான்!

மற்றொன்றையும் சொல்ல விரும்புகிறேன்; எம்.ஜி.ஆர். கட்சியைச் சேர்ந்தவர்கள் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காக நாம் போட்ட பாரத்தைப்போல அப்படியே போட்டிருக்கிறார்கள்; அண்ணாவின் படத்தைப் போட்டு, 'அண்ணா தி.மு.க.' எனப் பெயரிட்டிருக்கிறார்கள்.

கையெழுத்திட்டபின் கட்டுப்பாட்டை மீறியதேன்?

அந்தப் பாரத்தின் அடியில், 'கழகச் சட்ட திட்டங்களுக்கு அடங்கி நடப்பதாக உறுதி கூறுகிறேன்' என்ற வரிகள் இருக்கின்றன; அதன் அடிப்படையில்தான் ஒவ்வொர் உறுப்பினர்களிடமும் கையெழுத்து வாங்குகிறார்கள்; அந்த அடிப்படையில்தான் நானும்--கலைஞரும்--புரட்சி நடிகர் எம்.ஜி.ஆரும் கையெழுத்துப் போட்டுத் தந்திருக்கிறோம்.

'கழகச் சட்ட திட்டங்களுக்கு அடங்கி நடப்பேன்' என்று கையெழுத்துப் போட்டுவிட்டு -- கழகக் கட்டுப்பாட்டை மீறி நடந்த காரணமாகத்தான் எம்.ஜி.ஆர். மீது கழகம் நடவடிக்கை எடுத்தது; இதில் என்ன தவறு என்று கேட்கிறேன்.

எம்.ஜி.ஆர். மீது கழகம் நடவடிக்கை எடுத்தது, 'கட்டுப்பாட்டை மீறினார்' என்பதற்காகத்தானேயன்றி, 'கணக்குக் கேட்டார்' என்பதனால் அல்ல!

வளர்த்த கட்சி வழிதவறியதா?

ஒருவர், 'மகாலட்சுமி ரைஸ் மில்' என்று மகாலட்சுமியின் பெயரைத் தன்னுடைய கடைக்கு வைத்துக்கொள்கிறார்; வியாபாரம் நன்கு ஆக வேண்டுமென்பதற்காக அந்தப் பெயரை அவர் வைத்திருக்கிறாரே தவிர, மகாலட்சுமி கடையை வைக்கவில்லை!

அதுபோன்றுதான், அரசியல் வியாபாரத்துக்காக 'அண்ணா தி.மு.க.' என்று அவர்கள கட்சிக்கும் பெயரிட்டிருக்கிறார்களே தவிர, அது அண்ணா வைத்த பெயரில்லை! அண்ணா வைத்த பெயர் இங்கு இருக்கிறது; அண்ணா வளர்த்த கட்சி எங்களிடத்தில்தான் இருக்கிறது! அண்ணாவின் கொள்கை எங்களிடத்தில்தான் இருக்கிறது! அண்ணா அமைத்துத் தந்த அரசுதான் இந்த அரசு! அண்ணா கொடுத்த கொடி எங்களிடத்தில்தான் இருக்கிறது!

அண்ணாவின் விரோதிகள் எம். ஜி. ஆருக்கு நண்பர்கள்

நம்மை எதிர்க்க முனைந்திருக்கின்ற இராஜாஜியிடம் இன்று எம். ஜி. ஆர். ஆசீர்வாதம் பெறுகிறார்!

அண்ணாவை எதிர்த்து வந்த கல்யாணசுந்தரத்தினிடமும் -- காலதண்டாயுதத்தினிடமும் தான் அவர் இன்று கூடிக் குலவி, டில்லிக்குப் போய்விட்டு வந்திருக்கிறார்!

அன்றைய கதைத்தொகுப்பே இன்றையவசனம்

'நாத்திகம்' -- 'நவசக்தி' -- 'அலை ஓசை' போன்ற பத்திரிகைகள் நமக்கு விரோதமான நாளேடுகள்; இன்றைக்கு அவர் அவைகளைப் படிக்கச் சொல்லுகிறார்!

சுருங்கச் சொன்னால், அண்ணாவுக்கு யார் யார் விரோதிகளாக இருந்து வந்தார்களோ அவர்களெல்லாம் இன்று எம்.ஜி.ஆ-ருக்கு நண்பர்களாக விளங்குகிறார்கள்!

டில்லிக்குச் சென்று மர்மப் பேழையை இந்தியக் குடியரசுத் தலைவரிடம் கொடுத்துவிட்டுத் திரும்பியிருக்கிறார்கள்; அந்த மர்மப் பேழையை குடியரசுத் தலைவரிடம் அளிக்கும் போது போட்டோகிராபரை வரவழைத்துப் படம் எடுத்துக் கொள்ள அந்தச் சமயத்தில் முயன்றார்கள்; ஆனால் குடியரசுத் தலைவர் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை.

குடியரசுத் தலைவர், அந்த மர்மப் பேழையை இந்திரா காந்தி அம்மையாரிடம் கொடுத்து விட்டார்; அதை முதலமைச்சருக்கு இந்திரா காந்தி அம்மையார் அனுப்பியுள்ளார்; அதை நாங்கள் பிரித்துப் பார்த்தோம்; அதில் ஒன்றுமே இல்லை; முன்பெல்லாம் மற்றவர்கள் என்னென்ன எழுதி வந்தார்களோ அவைகளையெல்லாம் ஒன்றுசேர்த்து எழுதியிருக்கிறார்கள் -- அவ்வளவுதான்; அவைகளுக்கெல்லாம் நாங்கள் பதில் எழுத இருக்கிறோம்.

கொள்கையின் வேடம் இதுவா?

எப்படியாவது கழகத்தை அழித்தொழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில், எவ்வளவு இழித்தும் பழித்து எங்களைப் பேசவேண்டுமோ அந்த அளவுக்கும் பேசி வருகிறார்கள்! நாளுக்கு நாள் அவர்களது வேடம் கலைந்து கொண்டுதான் வருகிறது!

'உங்களை அழித்தொழிக்காமல் ஓயமாட்டேன்' என்கிறார்; அது எப்படி ஒரு கொள்கையாக இருக்கமுடியும்?"

'அரசியல்' தெரியாத ஆந்திரர்கள்!

"ஆந்திரத்தில் 3 இடங்களில் நடந்த போலீசுத் துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் 9 பேர் இறந்துபோனது குறித்து தலைமையமைச்சர் இந்திரா காந்தி அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்தார்."

—செய்தி : 21—11—72

உடனே, 'சட்டம் -- ஒழுங்கு குலைந்துவிட்டது; அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது' என்றெல்லாம் கூறி, 'மாநில அரசே -- இராஜினாமா செய்' என்று ஆந்திரத்தில் உள்ள எவரும் கூச்சல் போட்டதாகச் செய்தி இல்லை!

மாநில அரசை உடனே டிஸ்மிஸ் செய்க -- இந்த ஆட்சியை நீக்கிவிட்டு ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்துக' என்று எவரும் சொன்னதாகத் தெரியவில்லை!

தமிழ்நாட்டில் உள்ள சில அரசியல் தலைவர்களைப்போல் ஆந்திரத்தில் யாரும் இல்லாதது உள்ளபடியே ஆச்சரியத்துக்குரியதுதான்!

அங்குள்ள தலைவர்கள் தமிழ்நாட்டைப் பார்த்தாவது புரிந்து கொள்ள வேண்டாமா?

சுத்த மோசம் -- அவர்களுக்கு அரசியல் அரிச்சுவடியே தெரியாது போலும்!

கல்லெறியும் கயமைச் செயல் வேண்டாம்

கொள்கையின் முன் கொள்கையை நிறுத்துங்கள்

புதுக் கட்சிக்காரர்களுக்கு நாவலர் புத்திமதி

மேட்டுப்பாளையம், நவ. 22—

அன்னூர் ஈசுவரன் கோவில் திடலில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நடந்தது; கூட்டத்துக்கு என். பழனிசாமி தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது மேடையில் கல் வந்து விழுந்தது; நான்கு பக்கங்களிலிருந்தும் எம். ஜி. ஆர். ரசிகர்கள் கல்வீசி கலாட்டா செய்தார்கள்.

கல்வீச்சுக் குறித்து நாவலர் அவர்கள் குறிப்பிட்டு பேசியதாவது :—

"நாங்கள் அமைதி காக்கிறோம் -- அமைதி காக்கிறோம் என்று எம் ஜி.ஆர். பேசி வருகிறார்; ஆனால், கழகத் தொண்டர்கள் -- தலைவர்கள் -- அமைச்சர்கள் தாக்கப்படுகிறார்கள்; இப்போது இந்தக் கூட்டத்தில் கல் வீசினார்கள்; இதுதான் அமைதி காக்கும் முறையா?

"கொள்கைக்குக் கொள்கை பதில் கூறுவதைவிட்டுக் கல்வீசுவது தான் எம்.ஜி.ஆர். கட்சியின் கொள்கையா? எம்.ஜி.ஆர்.கட்சியின் யோக்கியதையை மக்கள் நன்குகத் தெரிந்து கொண்டார்கள்."

"1961-ல் சம்பத் நம்மிடமிருந்து வெளியேறினர்; 62-தேர்தல் வந்தது; சம்பத் -- காமராஜர் -- பெரியார் எதிர்ப்புகளையும் மீறி 50 இடங்களில் வெற்றி பெற்றோம்" 67 ல் 138 இடங்களைக் கொடுத்து ஆட்சிப் பொறுப்பை மக்கள் நம்மிடம் ஒப்படைத்தார்கள்.

உடனே, '72-ல் சந்திப்போம்' என்றார்கள்; நாம் '1971-லேயே சந்திக்கத் தயார்' என்று சட்டமன்றத்தைக் கலைத்துத் தேர்தலில் நின்றோம்.

ஆலை அரசர்கள் -- மோட்டார் மன்னர்கள் -- பட்டக்காரர்கள்-- ஏற்றுமதி வணிகர்கள் அனைவரும் நம்மை எதிர்த்தனர்; 138-ஐ 183 ஆக்கி மீண்டும் ஆட்சிப் பொறுப்பை நம்மிடம் ஒப்படைத்தார்கள்; இது, மக்கள் ஆதரவையே காட்டுகிறது.

திடீர் மாற்றம் ஏன்?

'எங்கே ஊழல்-- மக்களே கூறுங்கள்' என்று கேட்டு -- மக்கள் ஒருமித்த குரலில், 'கழக ஆட்சியில் ஊழல் இல்லை' என்றதும், புன்னகை தவழ எதிர்க் கட்சியினரை தலைநிமிர்ந்து பார்த்தவர், திடீரென்று 'ஊழல்' என்று கூறுவது ஏன்? இரண்டு மாதத்தில் ஏன் இந்தத் தடுமாற்றம்? இரண்டு மாதத்தில் என்ன நடந்தது?

வருமான வரிக்காக மத்திய அரசு நடவடிக்கை எடுத்தது; அதிலிருந்து தப்ப இந்த வேலையா?

கழக விதியை -- கட்டுப்பாட்டை மீறியபோது மேடையில் கணக்குக் கேட்டார்; கணக்குக் கேட்டதற்காக அல்ல -- கேட்ட முறைக்காக நீக்கி வைத்தோம்; ஆனால், அவரே கழகத்திலிருந்து விலகிக் கொண்டார்"

மற்றும் மே. சி. தூயமணி எம். எல். ஏ., அன்னூர் பாலு, கு. தங்கவேலு, கமாலுதீன், பழனிசாமி, சி. அரங்கநாதன் எம்.எல்.ஏ. ஆகியோரும் பேசினார்கள்.

சுல்தான் ஷா நன்றி கூறினார்.

ஆளுநரின் நேர்மை உள்ளம்

கோவை, நவ. 22—

"தமிழ்நாட்டின் தற்போதைய நிலைமையைச் சமாளிப்பதில் பாரபட்சமின்றியும் -- விருப்பு வெறுப்பின்றியும் -- அரசியல் சட்டம் அளித்துள்ள அதிகாரங்களுக்கு ஏற்பவுமே நடந்து கொண்டிருக்கிறேன்"

என்று ஆளுநர் கே. கே. ஷா, இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"எந்தத் தகராறிலும் என்னை இழுக்கக்கூடாது -- நான் அதை விரும்பவில்லை; நான் இந்தப் பதவியை விட்டுச் செல்கையில் 'ஒரு நல்ல -- நேர்மையான கவர்னராக இருந்தேன்' என்று எல்லோரும் நினைக்க வேண்டுமென்பதே என் அவாவாகும்."

மூடப்பட்டிருந்த கோவை ஆலைகள்

மீண்டும் திறக்கப்பட்டன

கோவை, நவ. 22—

தமிழ்நாட்டில் மூடப்பட்டிருந்த 7 ஆலைகளை ஏற்று நடத்தக் குடியரசுத் தலைவர் அவசரச் சட்டம் பிறப்பித்திருந்தார் அல்லவா? இதைத் தொடர்ந்து கோவையிலுள்ள சாரதா ஆலையை தமிழ்நாடு துணி ஆலைக் கார்ப்பரேஷன் (மத்திய அரசு நிறுவனம்) நேற்று ஏற்றுக் கொண்டது.

இந்த ஆலை, இரண்டாண்டுகளுக்கு மேலும் மூடப்பட்டிருந்தது.

"கோவையிலுள்ள பங்கஜா ஆலை--காளீசுவரா ஆலை ஆகியவையும் இன்று ஏற்கப்படுகிறது. பலராம வர்மா ஆலை (செங்கோட்டை), கோதண்டராம் ஆலை (மதுரை) ஆகியவையும் விரைவில் ஏற்று நடத்தப்படும்"

என்று இந்த நிறுவனத்தின் தலைவர் முராரி அறிவித்தார்.

வானொலியில் பொய்ப்பிரச்சாரம்

குறிஞ்சிப்பாடி, நவ. 17—

"15—11—72 அன்று பாண்டிச்சேரி வானொலியின் வாயிலாக மாலை 6-05 மணிக்கு ஒலிபரப்பப்பட்ட புதுவை மாநிலச் செய்தியில், 'குறிஞ்சிப்பாடியில் முழு அர்த்தால் நடைபெற்றது' என்று ஒலிபரப்பப்பட்டது; இது முற்றிலும் உண்மைக்கு மாறானதாகும்; குறிஞ்சிப்பாடியில் முழு அர்த்தால் நடைபெறவில்லை; துணிக் கடைகளும் -- பட்டாணிக் கடைகளும் -- வெற்றிலைப் பாக்குக் கடைகளும் திறந்தே இருந்தன; ரைஸ் மில்லும் ஓடியது; இரவு சினிமாக்களும் நடைபெற்றன"

என்று, குறிஞ்சிப்பாடி பேரூராட்சிக் கு. த. பெ. பழனியப்பன் அறிவிக்கிறார்.

சின்னமனூரில் எதிர்க் கட்சிகள் வன்செயல்

கடை திறந்திருந்த கழகத் தோழர்கள் தாக்கப்பட்டனர்

பொதுமக்கள் எதிர்க்கத் துவங்கியதும் காலிகள் தலைதெறிக்க ஓட்டம் பிடித்தனர்

சின்னமனூர், நவ. 23—

15-11-72-ல் 'அர்த்தால்' என்ற பெயரால் ஒட்டுக் காங்கிரசு-- சிண்டிகேட்-- இண்டிகேட் -- வலது கம்யூனிஸ்டுக் கட்சியினர் ஆகியோர் சுமார் 100 சிறுவர்களைத் திரட்டிக்கொண்டு, அன்று காலை முதல் நகரில் திறந்திருந்த கடைகளையெல்லாம் மூடும்படி கூச்சல் போட்டுக் கலாட்டா செய்து கொண்டிருந்தனர்.

கழக ஊழியரும்--தமிழ்நாடு முடி திருத்துவோர் முன்னேற்றச் சங்க தேனித் தொகுதி கிளைத் தலைவருமான தோழர் எஸ்.பி. சுப்பையா அவர்களின் உதயசூரியன் முடி திருத்தகத்தில் வந்து மூடும்படி கலாட்டா செய்தனர்.

அடுத்து, கழக ஊழியரும்—சின்னமனூர் ஒன்றிய சீரணித் தலைவரும்--சின்னமனூர் வட்டார பகுத்தறிவாளர் கழகக் கூட்டுச் செயலாளருமான எம். இரத்தினம் அவர்களின் அல்லி மிதிவண்டி நிலையம் நோக்கித் திரண்டுவந்தனர்; கடையை மூடும்படி கூச்சல் போட்டனர்; கடையில் விற்பனைக்காக இருந்த 'உண்மை'--'முத்தமிழ்' (அண்ணா படம் அட்டையில் [illegible]) கசக்கிக் கிழித்து எறிந்தார்கள்; கடை முன்னால் போடப்பட்டிருந்த கூரையைப் பிரித்தார்கள்; 'தீ வையுங்கடா' என்று கூச்சல் போட்டார்கள்.

தோழர் இரத்தினத்தையும் உள்ளே வைத்துக் கடையை அடைத்தார்கள்; விசிலடித்துக் கொண்டு கலைந்து சென்றார்கள்.

அரை மணி நேரத்திற்குப்பின் மீண்டும் அதே கூட்டம் கடையை நோக்கி வந்தது.

அப்பொழுது கடையில், நகர தி. மு. க. முன்னாள் செயலாளரும் -- சின்னமனூர் வட்டாரப் பகுத்தறிவாளர் கழகத் தலைவரும்-- அண்ணா நாடக மன்றத் தலைவருமான திரு. எஸ். வேல்சாமி, கழக ஊழியரும் சின்னமனூர் வட்டாரப் பகுத்தறிவாளர் கழகப் பொருளாளருமான கே. எஸ் இராதா ஆகியோர் கடைமுன் நின்றிருந்தனர்; 'வன்முறை நல்லதல்ல' என்று அவர்கள் எவ்வளவோ எடுத்துச் சொன்னார்கள்; ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து செல்வதுபோல் சென்று, சரமாரியாகக் கடையை நோக்கிக் கல் வீசினர்; எதிர்க் கட்சிக்காரர்கள் ஓரத்தில் நின்று தூண்டிவிட்டுக் கொண்டே இருந்தனர்.

இந்த அக்கிரமத்தைப் பொறுமையுடன் பார்த்துக்கொண்டிருந்த பொதுமக்கள் எதிர்க்கவே அவர்கள் கலைந்து சென்றார்கள்.

பிற்பகல் 1-மணிக்கு சைக்கிளில் சென்றுகொண்டிருந்த கழக ஊழியர் ச. சந்தானம் அவர்களை 100 குண்டர்கள் வழிமறித்துத் தாக்கியிருக்கிறார்கள்; இது பற்றிப் போலீசில் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

இதுபோல் நகரில் பல இடங்களில் அன்று வன்முறையில் ஈடுபட்டனர்.

மேலும் கழகத் தோழர் சின்னதம்பியின் கடையை அடைக்கச் சொல்லி ஆர்ப்பாட்டம்செய்தனர். அருகிலிருந்த நகர தி.மு.க. துணைச் செயலாளர் கே. குருநாதனை 10 குண்டர்கள் தூக்கிக் கொண்டு போய் விட்டுவிட்டார்கள்.

இரஷ்யாவிடமிருந்து அதிக உதவி பெறத் திட்டம்

புதுடில்லி, நவ. 22—

"அடுத்த மூன்று ஆண்டுகளில் உருக்கு---பெட்ரோலியம் -- மின்சாரம் -- உரம் ஆகிய திட்டங்களுக்கு நேச நாடுகளிடமிருந்து -- குறிப்பாக இரஷ்யாவிடம் இருந்து அதிக உதவி பெற இந்தியா எண்ணியிருக்கிறது"

என்று நாடாளுமன்ற மேலவையில், வெளிநாட்டு வாணிபத்துறை அமைச்சர் எல். என். மிச்ரா தெரிவித்தார்.

'அண்ணா அமைத்த அரசைக் காப்போம்'

டாக்சி டிரைவர்கள் உறுதி

15—11—72 அன்று குன்னூர் நகர தி.மு.க. செயற்குழு உறுப்பினர் தா. பிரான்சிஸ் தலைமையில் டாக்சி டிரைவர்கள் சங்கத் தலைவர் திரு. கண்ணன், அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தார்.

அதுபோது, டிரைவர்கள் -- பொதுமக்கள் 500-க்கு மேற்பட்டவர்கள் கூடியிருந்து, 'அண்ணா வழியில் நடக்கும் கலைஞர் ஆட்சியைக் காப்பாற்றுவோம்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

கழகத் தோழர் கடையில் காலிகள் வெறியாட்டம்

'அர்த்தாலன்று ஏன் கடைதிறந்தாய்' என்று கேட்டு அடித்தனர்

சோடாபுட்டிவீச்சில் ஒருவருக்குப் பலத்த காயம்

சிதம்பரம், நவ. 20—

சிதம்பரம் புலவர் மூத்[illegible]தமிழரசன் அவர்கள், தமது கடையில் நடந்த நிகழ்ச்சி குறித்[illegible] அறிவிப்பதாவது :—

"நான் சிதம்பரம் மேலவீ[illegible]யில் உள்ள அண்ணா அங்கா[illegible]யில், கலைஞர் கருணாநிதி காய்[illegible]கறிக் கடையும், நாவலர் நெடு[illegible]செழியன் குளிர்பானக் கடையும், [illegible]ரா-சிரியர் அன்பழகன் இரவு பால் கடையும் வைத்து இரண்டாண்டுக் காலமாக நடத்திவருகிறேன்.

15—11—72 அர்த்தாலன்று என்னுடைய இந்தக் கடைகளை மூட வேண்டுமென்று சில காலிகள் என்னை வந்து மிரட்டியும் கலைஞரைப் பற்றியும் -- நாவலரைப் பற்றியும் -- கழகத் தலைவர்களையும் என்னையும் மிகவும் கேவலமாகப் பேசியும், 'நீ எப்படி கடை தொடர்ந்து நடத்துவாய் என்று பார்க்கிறேன்' என்று சொல்லிச் சென்றார்கள்.

20—11—72 இரவு 10-30 மணியளவில் கலியன் என்பவர் தலைமையில் ஆர். செல்வம் -- பக்கிரி மற்றும் முகம் தெரியாத நால்வர் வந்து பழக் கடையில், 'ஒரு கிலோ ஆப்பிள் வேண்டும்' என்று கேட்டார்கள்; 'பழம் விலைதான் சொல்லலாம்; கிலோ கணக்குக் கிடையாது' என்று சொல்ல, 'என்னடா கடை இது' என்று தகாத வார்த்தைகளையும் கூறி, டி கிளாசினாலும் -- சோடா புட்டியினாலும், பெரிய பெரிய புட்டிகளாலும் தாக்கினர்; கடையிலிருந்த டி. குஞ்சிதபாதம்-- கே. கண்ணன் --- நடேசன் ஆகியோரைத் தாக்கினர்; ஏராளமான பொருள் நட்டத்தை உண்டாக்கிவிட்டு, 'இதுதான் 15-ந் தேதியன்று கடை திறந்ததற்கு தண்டனை' என்று கூறிவிட்டு ஓடிவிட்டனர்.

டி. குஞ்சிதபாதம் பலத்த காயங்களுடன் -- மோசமான நிலையில் அரசாங்க மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்."

'தலைமைக் கழக நடவடிக்கை சரியானதே'

பம்பாய் தி. மு. க. மத்தியக் குழு தீர்மானம்

கலைஞர் தலைமையில் கட்டுப்பாடு காக்க உறுதி

பம்பாய் திராவிட முன்னேற்றக் கழக மத்தியக் குழுக் கூட்டம், 12—11—72 ல் தோழர் என். வி. முத்தையா தலைமையில் நடைபெற்றது.

மத்தியக் கழகச் செயலாளர் தியாகராசன், முன்கூட்ட நிகழ்ச்சிகள் கடிதப் போக்குவரத்துகள் ஆகியவைகளைப் படித்துக் காட்டினார்.

பின்னர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் விலகலையொட்டி ஏற்பட்ட நிலைமைகள் குறித்துத் தோழர்கள் எம். வி. சுலைமான், பி. எஸ். கலைச்செல்வன் ஆரியசங்காரன், தா. மு. பொற்கோ, ஏ. எல். பெருமாள், ச. சொ. மணி, அன்புச் செழியன் ஆகியோர் விளக்கம் அளித்தனர்.

பின்னர் கீழ்க்காணும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது :—

"கழகக் கட்டுப்பாட்டை மீறி நடந்துகொண்ட எம். ஜி. இராமச்சந்திரனை, கட்சியிலிருந்து வெளியேற்றிய கழகத் தலைமையின் முடிவை இக்குழு ஒருமனதாக ஏற்றுக்கொள்கிறது!"

என்றும்போல் பம்பாய் தி. மு. கழகம், தலைவர் கலைஞர் கருணாநிதியின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கும் என்றும் முடிவாகியது.

பின்னர் தோழர் இராசாங்கம் எம்.பி., நெல்லை சண்முக சுந்தரராசா, பிரதாப்சந்திரன், இராமநாதபுரம் முத்து, பம்பாய் தி. மு. க. அவைத் தலைவர் மூர்த்தியின் தந்தை ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

பொருளாளர் ஆரியசங்காரன் நன்றி நவின்றார்.

தலைமைக் கழகக்கொள்கைகளை விளக்கப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள திருவை. அண்ணாமலை அழைக்கப்படவிருக்கின்றார்.

பம்பாய் -- தாராவி அண்ணா படிப்பகம்

12-11-72-ல், பம்பாய் -- தாராவி அபூபக்கர் சால் அ[illegible]ணா படிப்பகத்தின் பொது உறு[illegible]பினர் கூட்டம் குட்டிவாடியில் [illegible]தோழர் கே. எம். பக்கீர் தலைமையில் [illegible]டந்தது.

முதலில் படிப்பக வரவு [illegible]செலவுக் கணக்கு தாக்கல் செய்[illegible]யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

அடுத்து, கழக நிலை கு[illegible]த்துத் தோழர்கள் வி. என். [illegible]னி, அ. சிந்தா, டி. எம். பீர், ம[illegible]கமலி, ஏ. ஆதம், கே. எம். [illegible]ஸ் மைதீன் ஆகியோர் விளக்கிக் [illegible]றினர்.

படிப்பகத்தில் காலியான [illegible]பொருளார் பதவிக்குத் தோழர் ம[illegible]கமலியும், துணைச் செயலா[illegible]ராக ஏ. ஆதமும் ஏகமனதாகத் [illegible]தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அடுத்து, கீழ்க்காணும் [illegible]ர்மானங்கள் ஏகமனதாக [illegible]றைவேறின :—

கடந்த மாதம் 12, 13, 14, 15-ந் தேதிகளில் நடந்து முடிந்த தி.மு.க. தலைமைச் செயற்குழு -- பொதுக் குழுத் தீர்மானங்களை மு[illegible]னத்துடன் ஏற்றுக் கொள்வ[illegible]டன் மேற்கண்ட கூட்டங்களில் [illegible]தோழர் எம்.ஜி.ஆர். மீது எடுத்த நட[illegible]டிக்கையை ஏற்றுக்கொண்டு கு[illegible]த்த நேரத்தில் தகுந்த நடவடி[illegible]க்கை எடுத்த செயற்குழு -- பொது[illegible]க்குழு உறுப்பினர்களை இக்கூட்[illegible]டம் பாராட்டுகிறது.

தாய்க் கழகமாம் திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சிக்கு உறு துணையாக இருப்பதுடன், என்றென்றும் கழகச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுத் தொடர்ந்து நடப்பதெனவும் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

இதுவரை 'எம்.ஜி.ஆர்.' என்று அழைக்கப்பட்ட தோழர் காதர் இன்றுமுதல் 'கலைஞர் காதர்' எனப் பெயர் மாற்றிக்கொண்டார்.

திருச்சி மாவட்டத்தில் குறுவை அறுவடை

1,18,000 டன் கண்டு முதல்

திருச்சி, நவ. 21—

"திருச்சி மாவட்டத்தில் குறுவை அறுவடை முடிந்துவிட்டது; இதில் ஒரு ஏக்கருக்கு 1.80 டன் முதல் 2 டன் நெல் வரையில் மகசூல் கிடைத்தது; மொத்தத்தில் குறுவை அறுவடையில் 1,81,000 டன் நெல் கிடைத்திருப்பதாக மதிப்பிடப்படுகிறது"

என்று, திருச்சி மாவட்ட கலெக்டர் டி. பி. பாரதி இங்கு தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"சம்பா நாற்று நடும் வேலையும் முடிந்துவிட்டது; தாளடி நாற்று நடும் பணி முடியும் தறுவாயில் உள்ளது.

இந்த மாவட்டத்தில் விவசாயிகள் தங்கள் நெல்லை மிகவும் குறைந்த விலைக்கு விற்கும்படியான சூழ்நிலை ஏதும் ஏற்படவில்லை; அவ்வாறு யாரும் விற்றதாகத் தகவல் இல்லை; ஆனால், நிலக்கடலைப் பருவத் துவக்கத்தில் மழை பெய்யாத காரணத்தால், புதுக்கோட்டைப் பகுதியில் நிலக்கடலைப் பயிர் பாதிக்கப்பட்டது.

திருச்சி மாவட்டத்தில் இரசாயன உரங்கள் போதிய அளவுக்கு இருப்பு உள்ளது; தோட்டத்தில் பயிரிடப்படும் காய்கறிகளுக்குப் போடுவதற்காக இந்த மாவட்டத்துக்கு 1,500 டன் கால்சியம் அமோனியம் நைட்ரேட் ஒதுக்கப்பட்டுள்ளது.

சட்டம்-அமைதி குலைந்த நிலையில் ஆந்திரம்

வன்செயல்--கொள்ளை--தீ வைப்பு--கலவரங்கள் தொடர்கின்றன

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானோர் தொகை அதிகரிப்பு--அமைதி நிலைநாட்ட அதிகாரிகளுடன் முதல்வர் ஆலோசனை

ஐதராபாத், நவ. 22—

ஆந்திர மாநிலத்தில் செவ்வாய்க்கிழமையன்று நடந்த துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது.

தெனலியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் மேலும் இருவர் இறந்ததாகவும், அதோனி துப்பாக்கிச் சூட்டில் குண்டடிபட்ட ஒரு சிறுவன் நேற்று மருத்துவமனையில் இறந்ததாகவும் தகவல் கிடைத்துள்ளது.

வழக்கறிஞர்கள்--இளைஞர் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் உட்பட எட்டுப் பேர் விசயவாடாவிலும்--மசூலிப்பட்டணத்திலும் கைது செய்யப்பட்டதாக அதிகாரபூர்வமான தகவல் கூறுகிறது.

இரயில்வே ஊழியரை உயிரோடு கொளுத்த முயற்சி

'முல்கி' விதியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தும் வன்முறைக் கூட்டம் விஜயவாடா பிரிவில் இரண்டு இடங்களில் இரயில்வே ஊழியர்களை உயிரோடு கொளுத்த முயன்றனர்.

ஓங்கோல் அருகிலுள்ள அம்மனபுரோலு என்ற இரயில் நிலையத்திற்குள் இருந்த கேபின் அறை மீது மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைத்தனர்; அதன் உள்ளிருந்த இரண்டு போலீசுக்காரர்கள் ஜன்னல் வழியாக ஏறிக் குதித்து உயிர் தப்பினர்.

கூட்டத்தைப் பார்த்துச் சுடப்போவதாக அச்சுறுத்தி வன்முறையாளர்களை விரட்டியடித்தனர்; இதற்கிடையில், உள்ளே தவித்துக் கொண்டிருந்த இரயில்வே ஊழியரை, மற்ற இரயில்வே ஊழியர்கள் மீட்டனர். அவர் தீக்காயங்களுடன் உயிர் தப்பினார்.

நிடுபுரோலி என்ற இரயில் நிலையத்தின் கேபின் அறைக்குள் ஓர் இரயில்வே ஊழியரைத் தள்ளிக் கதவை மூடிவிட்டு ஒரு வன்முறைக் கும்பல் தீ வைத்தது. கேபின் அறை எரிந்து சாம்பலாயிற்று; உள்ளே சிக்கிய ஊழியர் மருத்துவமனையில் இறந்தார்.

இரயிலில்; ஏற்றப்பட்டிருந்த இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் சூறையாடப்பட்டும் --- தீயிடப்பட்டும் இழப்புக்கு உள்ளாயின.

ஆயிரக்கணக்கானவர்கள் அடங்கிய ஒரு கூட்டம் டீசல் இரயில் பெட்டிக்குத் தீ வைத்தது; அந்தப் பெட்டியின் மதிப்பு ரூ. 23 இலட்சமாகும்.

மற்றும் இரயில் நிலையம் முழுவதும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.

சில இடங்களில் இரயில் பாதையிலுள்ள பிஷ்பிளேட்டுகள் அகற்றப்பட்டதாகவும் தகவல் கிடைத்தது.

இப்படி ஆந்திரத்தின் பல பாகங்களிலும், கலகம்--வன்செயல்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.

அமைதி நிலை நாட்ட முயற்சி

இதற்கிடையில், மத்திய உள்துறைச் செயலாளர் கோவிந்தன் நாயர்--ஆந்திர முதலமைச்சர் நரசிம்மராவ், ஆகியோர் இங்கு இன்று மாலை வந்து சேர்ந்தனர்; மாநில அரசின் தலைமைச் செயலாளரும்--போலீசு இன்ஸ்பெக்டர்--ஜெனரலுடனும் அவர்கள் அமைதி நிலை நாட்டுவது குறித்து ஆலோசனை நடத்தினர்.

முந்திரி சாராயத் தொழிற்சாலைகள்

தென்னாற்காடு -- இராமநாதபுரம் மாவட்டங்களில்ஏற்படுத்தப்படும்

சென்னை, நவ. 23—

முந்திரிப் பழத்திலிருந்து சாராயம் தயாரிக்கும் இரண்டு தொழிற்சாலைகள் தமிழகத்தில் அமைக்கப்படும்.

[illegible] ஒரு முந்திரி சாராயத் தொழிற்சாலையும், இராமநாதபுரம் மாவட்டத்தில் இன்னொரு தொழிற்சாலையும் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இவை ஒவ்வொன்றும் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் முந்திரி சாராயம் உற்பத்தி செய்யும்.

வர்த்தக ஒலிபரப்பு மூலம் ரூ. 6.50 கோடி இலாபம்

புதுடில்லி, நவ. 23—

வானொலியில் வர்த்தக ஒலிபரப்பின் மூலம் மத்திய அரசுக்கு இந்த ஆண்டில் ரூ. 6,64,00,000 இலாபம் கிடைத்திருக்கிறது.

இத்தகவலை, நாடாளுமன்றத்தில் தகவல் -- ஒலிபரப்புத் துணையமைச்சர் தாம்பீர் சின்கா தெரிவித்தார்.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை தலைமைச் செயற்குழுக் கூட்டம்

சென்னை, நவ. 23—

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் தலைமைச் செயற்குழுக் கூட்டம், 29-11-72 காலை 10 மணியளவில் சென்னை--தேனாம்பேட்டை 'அன்பகம்'த்தில் நடைபெறும்; அதுபோது கீழ்க்காணும் பொருள்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் :—

1. பேரவையில் இணைக்கப்பட்ட சங்கங்களை அங்கீகரித்தல்.
2. பேரவை நிர்வாக நடவடிக்கைகள்.
3. கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் மாநாடு.
4. சிறப்புக் கூட்டங்கள்.
5. பேரவைக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள [illegible] மனோகரன் எம்.பி., எஸ். ஆர். இராதா, இரா. மா. பொன்னுசாமி ஆகியோர்மீது நடவடிக்கைகள் மேற்கொள்வது.
6. பேரவையின் நடப்பு ஆண்டுக்கான பொதுக்குழு உறுப்பினர்கள் பட்டியல் அங்கீகாரம்.
7. வரவு – செலவு.

---காட்டூர் கோபால்
பேரவை பொதுச்செயலாளர்

கள்ளக்குறிச்சி வட்ட தி.மு.க. செயல் வீரர்கள் கூட்ட முடிவு

கள்ளக்குறிச்சி வட்ட தி. மு. கழகச் செயல் வீரர்கள் கூட்டம், 40—11—72 மாலை 3-மணியளவில் அவைத் தலைவர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்றது.

வட்டச் செயலாளர் கொ. மாரியப்பன் அனைவரையும் வரவேற்றார்.

தோழர்கள் எஸ். ஏ. கரீம், கே. காசீம், சி. வேணு, இளங்கோ, கே. கந்தசாமி, க. பெ. நெடுமாறன், இராமன், பழனிவேல், கணபதி, ஆறுமுகம். இராசரத்தினம், இராமசாமி, இரா. நல்லமுத்து, எஸ். பி. ஐச்சையப்பன், மொட்டையன், மா. தங்கவேலன், அ. நடராசன், நாராயணன், ஈசாக் உசேன், கலியபெருமாள், கருப்பன், ஆண்டப்பன் இரங்கசாமி, கோபால், சுப்பிரமணியன், திருப்பதிராஜ், வெள்ளையன், நல்லமுத்து, ஆசீம், அருணாசலம், மூக்கன், சின்னசாமி, துரைராஜ், முத்தையன், வேங்கிடபதி பி. ஏ. பி. எல்., பி. இராமகிருட்டினன், செல்லமுத்து, பெரியசாமி பி.ஏ.பி.எல்., ந. நாச்சியப்பன் எம்.எல்.ஏ. ஆகியோர் பேசிய பின், வட்டத் துணைச் செயலாளர் மு. பாண்டியன் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களாவன :—

கழகச் சட்டத் திட்டப்படி தலைமைக் கழகம், திரு. எம். ஜி. இராமசந்திரன்மீது நடவடிக்கை எடுத்துக் கழகத்திலிருந்து விலக்கிவைத்ததை இக்கூட்டம் ஒருமனதாக வரவேற்கின்றது.

கழக வளர்ச்சிக்கு ஒவ்வொரு கிளைக் கழகமும் முழு முயற்சியாகப் பாடுபடுவதெனவும், புதிய கிளைகளைத் திறக்கக் கழகத்தோழர்கள் செயலாற்றுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

ஒவ்வொரு கிளைக் கழகமும்--தொண்டர்களும், கழக நாளிதழ்களான 'நம் நாடு', 'முரசொலி' ஆகிய ஏடுகளைத் தவறாது வாங்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

வட்டத்திலுள்ள 5 ஊராட்சி ஒன்றியங்களும் குழு அமைத்து--ஒவ்வொரு ஒன்றியத்திலும் கழக நிலைமையைக் கண்காணிக்கவும், கழக வளர்ச்சிக்கு ஆக்கப் பணியினை மேற்கொள்ளவும், தக்க நடவடிக்கை எடுக்க ஒன்றியப் பகுதியில் உள்ள கழக முக்கியஸ்தர்களையும், செயலாளர்களையும் கேட்டுக் கொள்ளுகிறது.

ஒன்றியங்களில் அமையும் குழுவுடன் சட்டமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினரும், வட்டச் செயலாளரும் கழக வளர்ச்சிக்கான முழு ஒத்துழைப்பும் கொடுத்துச் செயல்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

கழகப் பிரச்சாரத்திற்குச் சொற்பொழிவாளர்களை அழைத்து முறைப்படி கூட்டங்கள் நடத்த வட்டச் செயலாளர் கொ. மாரியப்பன் -- வட்டத் துணைச் செயலாளர் மு. பாண்டியன் ஆகியோருக்கு அதிகாரம் கொடுத்து தீர்மானிக்கப்பட்டது; கிளைக் கழகச் செயலாளர்கள் வட்டச்செயலாளருடன் தொடர்புகொண்டு மட்டுமே கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் இராசாங்கம் இயற்கையெய்தியதைக் குறித்து ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பம்பாயில் அண்ணா பிறந்த நாள் விழா

பம்பாய்--செம்பூர் தி. மு. கழகச் சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா 26—11—72 மாலை 7-30 மணிக்கு சுபாஷ் நகர் திறந்த வெளி அரங்கில் நடைபெறும்; தலைவர் : ம. இரா. ஏ. இரத்தின சாமி; வரவேற்புரை : ஏ. எல். பெருமாள்; சிறப்புரை : திருவை அண்ணாமலை; அண்ணா படத் திறப்பு : எஸ். தியாகராசன்; பேசுவோர் : இரா. சுப. குமார், அசோகன், த. மு. பொற்கோ, நெல்லைச் செழியன், த. நா. அபூர்வபாண்டியன், பி. மந்திரமூர்த்தி, பாண்டுரங்கன், டி. எம். சாமி.

செயல்வீரர் கூட்டம்

"உடையார்பாளையம்-- அரியலூர்—பெரம்பலூர் ஆகிய வட்டங்களைச் சேர்ந்த தி. மு. க. செயல் வீரர்கள் கூட்டம், 26—11—72 மாலை 3-மணியளவில் அரியலூர் அம்பாள் திரையரங்கில் வேளாண்மைத்துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தலைமையிலும்—மாவட்டச் செயலாளர் எம்.எஸ். வெங்கடாசலம் முன்னிலையிலும் நடைபெறும்; கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் -- உணவு அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்களும் கலந்துகொள்வார்கள்.

"கிளைக் கழகச் செயலாளர்களும்—மேல் அமைப்புப் பிரதிநிதிகளும்—ஊராட்சித் தலைவர்களும—முக்கியப் பிரமுகர்களும—ஏனைய செயல்வீரர்களும் கலந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்"

என்று உடையார்பாளையம் வட்டச் செயலாளர் க. சொ. கணேசன் அறிவிக்கிறார்.

முதலமைச்சர் கலைஞர் நிகழ்ச்சிகள்

நவ. 25 காலை : திருவாரூர்;
மாலை : பட்டுக்கோட்டை — பொதுக்கூட்டம்.

நவ. 26 காலை 9 மணி : புதுக்கோட்டை — தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் திறப்பு; 11 மணி : திருச்சிராப்பள்ளி;
மாலை 4 மணி : அரியலூர்;
இரவு 7 மணி : பொதுக்கூட்டம்.

உணவுத் துறை அமைச்சர்

ப. நாராயணசாமி நிகழ்ச்சிகள்

நவ. 25 காலை : திருவாரூர்; மாலை : பட்டுக்கோட்டை.

நவ. 26 காலை : திருச்சிராப்பள்ளி; மாலை 4 மணி : அரியலூர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

25--11--72

குளித்தலை

நகர தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு திரு. வி. க. திடலில்; தலைவர் : கே. பி. சிவராசு; பேசுவோர் : அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், எம்.எஸ். வெங்கடாசலம், து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ., ஜி பராங்குசம் எம்.எல்.சி, வீரையா எம்.பி., எம். கந்தசாமி எம்.எல்.ஏ., குளித்தலை மூத்துக்கருட்டினன் எம். எல். சி., மு.க.து. நடராசன் எம்.எல்.சி., இளமுருகு பொற்செல்வி, கு. வீ. முத்துசாமி, ஆ. பெ. கிருட்டிணன், ச. அண்ணாவி மற்றும் பலர்.

26--11--72

புதுக்கோட்டை

நகர தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு திலகர் திடலில்; தலைவர் : ஆர். இராசமாணிக்கம்; பேசுவோர் : அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி, எம். எஸ். வெங்கடாசலம், செல்வேந்திரன், அ. தியாகராசன் எம்.எல்.ஏ., க. வீரையா, சி.தமிழரசி எம்.சி., அ. பெரியண்ணன், எஸ். கே. முகம்மது அலி, பா. செழியன் எம்.சி., அ. மாணிக்கம் எம்.சி. மற்றும் பலர்.

சிதம்பரத்தில் கழகப் பொதுக்கூட்டம்

சிதம்பரம், நவ. 21—

சிதம்பரம் நகர தி.மு.க. சார்பில் கீழவீதி தேரடியில், நகர தி.மு.க. செயற்குழு உறுப்பினர் இரா. சிவகுமார் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் கல்விக்கரசன், ஞானசேகரன், இராமு, நகர் மன்ற உறுப்பினர்கள் சுந்தரமூர்த்தி, வி. ஆறுமுகம், கு. பாலசுப்பிரமணியம், சி. பி. கனகசபை, ம. சவுரிராசன், ஆர். சிவக்கொழுந்து, மாயாமச்சீந்திரன், திருநாவுக்கரசு, நகரத் துணைச் செயலாளர் இராம. முத்துக்குமரன், புலவர் முத்து, தமிழரசன், பரம. நடேசன், மாவட்டப் பிரதிநிதி இரா. சக்கரவர்த்தி, வட்டத் துணைச் செயலாளர் கோ. வீரமணி, வட்டச் செயலாளர் தி. ப. மணி, புலவர் க. ஆறுமுகம், நகர் மன்றத் தலைவர் கோ. துரைராசன், சுப்ரவேலு எம்.பி, பொன். சொக்கலிங்கம் எம்.எல்.ஏ., புதுக்கோட்டைத் தமிழரசி ஆகியோர் பேசினர்.

செயலாளர் சு. கோவிந்தராசன் நன்றி கூறினர்.

இந்திரா கட்சி மாநாட்டுக்கு மாநில அரசு செலவிட்ட தொகை

குசராத் முதலமைச்சர் வெளியிடும் தகவல்

காந்திநகர், நவ. 21—

"குசராத் மாநிலத்தில் காந்தி நகரில் சென்ற மாதம் அகில இந்திய இந்திரா காங்கிரசுக் கமிட்டிக் கூட்டம் நடந்தபோது போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும்--கண்காட்சிக்கும் பாதுகாப்பு அளிக்கவும் ரூ 2,30,000 செலவில் 3 543 போலீசாரை குசராத் மாநில அரசு ஏற்பாடு செய்தது"

என்று முதலமைச்சர் கன்சியாம் ஓசா சட்டமன்றத்தில் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"அ. இ. கா. க. கூட்டத்தின் போது, ஒரு கூட்டத்திற்கு ஆதிவாசிகளை அழைத்து வர 1,000 ஊராட்சி வண்டிகள் பயன்படுத்தப்பட்டன" என்றும் அவர் சொன்னார்.

"இவ்வாண்டு துவக்கத்தில், அம்ரேலி தொகுதியில் சட்டமன்றத் தேர்தலின்போது அம்ரேலி விமான நிலையத்தில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி ஒரு கூட்டத்தில் பேசினார்; அக்கூட்டத்தை ஏற்பாடு செய்ய ரூ. 11,000 செலவழிக்கப்பட்டது. அந்தத் தொகையைத் திரும்பப் பெறுவதற்காக அம்ரேலி மாவட்ட இந்திரா காங்கிரசுக் கமிட்டிக்கு அரசு எழுதியிருக்கிறது; அந்தக் கமிட்டியிலிருந்து பதில் இன்னமும் வரவில்லை" என்றும் அவர் கூறினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] வெளியிடப்படுகிறது.